முருகப்பெருமான் துணை

**மகான் அம்பிகானந்தர் அருளிய அறிவுரை ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

02.05.2023, செவ்வாய்க்கிழமை

1. சத்திய ஞானவழிகள் காட்ட
சற்குருவாய் வந்த அரங்கனே
உத்தமர்களாக உலகினில் படைக்க
உண்மைநெறி காட்டும் அரங்கனே
2. அரங்கனே உன்பெருமை கூறி
அகிலமதில் சோபகிருது தகர்திங்கள்
வரங்களென மூவாறோர்திகதி குசன்வாரம்
(சோபகிருது வருடம் சித்திரை மாதம் 19ம் நாள், 02.05.2023, செவ்வாய்க்கிழமை)
வழங்குவேன் அறிவுரை ஆசி
3. ஆசிதனை அம்பிகானந்தர் யானும்
அருளுவேன் உலகோர் ஞானம்பெற
வாசிவென்ற ஞானிகள் படை
வழிகாட்டிட மக்களை நோக்கி
4. நோக்கி அரங்கன் சக்திவழி
நிலவுலகில் ஞானமதை அருள
தேக்கமின்றி கலியுக மக்கள்
தேடி பிரணவக்குடிலுக்கு அனுகி
5. அனுகி அரங்கன் திருவடிபற்றி
ஆசி தீட்சை அடைதலுற
அனுகூலம் ஞானவடிவாகி
அரங்கன் வழி அவரவர் விரும்பும்
6. விரும்பும் ஞானிகள் காட்சி
வினவிட வரமாகக் கிட்டி
அரும்பசி மற்றவர் பிணி அகற்றும்
அறம் நிறைந்த மக்களாய் மாற்றி
7. மாற்றியே ஞானியர்கள் வழிவழி
மகத்துவமான வாய்ப்புக் கிட்டி
ஆற்றல் மிக்க சக்திகளாகவே
அனைவரும் தேறி நிற்பர்

8. தேறவே இந்தவித உயர்வுதனை
தேசிகனை கொண்டு ஆறுமுகனார்
அறமாக நடத்தி வருதல் காண
அரங்கனின் தருமஞான சேவையை
9. சேவையை மக்கள் ஏற்று
செகமெல்லாம் செய்து வருக
அவனியில் கர்வம் தோன்றிடா
ஆசான் வழி ஆசி அருள்பலமாக
10. ஆகவே நிலைகளில் எக்கணமும்
ஆணவம் கன்மம் மாயை
மிகைபடா அனுகிடா அகன்றோடி
மேலானவர்களாக மக்களிடை தேற்றம்
11. தேற்றம் எளிமை மிகுதிபடவே
தெய்வநெறிபட வாழ்வு சிறந்து
ஆற்றல் மிக்க ஞானப்படைகளாக
அரங்கனால் ஞானிகளாகவே மாறுவர்
அறிவுரை ஆசி முற்றே

—சுபம்—